சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 19.08.2025

வா.சா.1 – திருப்பதி S/oகுருசாமி

O.S. No.360/2021

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

அழகர்சாமி என்பவருடைய சொத்து அவருடைய அம்மா மீனாட்சி அம்மாள் என்பவரிடம் இருந்து தான செட்டில்மெண்ட் வாயிலாக அவருக்கு கிடைக்கப்பட்டது. அழகர்சாமிக்கு ஒரு மகன், மற்றும் 3 மகள்கள் வாரிசுகள் ஆவர். வழக்கு சொத்து தொடர்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூர் முன்பாக அ.வ.எண்.96/2017 1ம் பிரதிவாதி காவேரி, 2ம் பிரதிவாதி சந்தானம், 3ம் பிரதிவாதி ஜோதி மற்றும் லெட்சுமி, செல்வி ஆகியோர்கள் அர்ஜினன்பெருமாள் என்பவர் மீது விளம்புகை பரிகாரத்திற்காகவும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் ரீசர்வே நம்பர் 13/5 தொடர்பாக 48 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் வழக்கு சொத்தின் மீது கிரைய உடன்படிக்கை தாக்கல் செய்தது தெரிந்து அர்ஜினன்பெருமாள் மீது இவ்வழக்கின் பிரதிவாதிகள் மற்றும் லெட்சுமி, செல்வி ஆகியோர் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்தார்கள். அர்ஜினன்பெருமாள் தடங்கல் மனு கொடுத்த பிறகு பத்திர பதிவு தடைபட்டது. இந்த வழக்கு சொத்தை பொறுத்து அரசு வழிகாட்டுதல் மதிப்பீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அழகர்சாமி இறப்பு தொடர்பாக பிரதிவாதிகளிடம் ஏற்படுத்தி கொண்ட கிரைய உடன்படிக்கையில் அவர் இறப்புக்கு பிறகு ஒப்பந்தம் போடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் தெரியவில்லை. அழகர்சாமி சிறுநீரககோளாறு ஏற்பட்டு இறந்துவிட்டார். அழகர்சாமியிடம் சர்வே நம்பர் 13/4A2 என்ற

சொத்திற்கான கிரையத்தை முடித்த ஒருமாதத்திற்குள்ளாக அழகர்சாமி இறந்துவிட்டார். வழக்கு சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெற்கில் உள்ள சர்வே நம்பர் 13/4A2 நான் கிரையம் பெற்ற சொத்து, மேற்கில் சர்வே நம்பர் 13/4A1 என் மனைவி ஜலபிரபா கிரையம் பெற்ற சொத்து, கிழக்கில் சர்வே நம்பர் 13/3 வாய்க்கால், வடக்கில் அர்ஜினன் பெருமாள் நிலம் உள்ளது. இந்த வழக்கு தொடர்பாக என் மீது முதல் தகவல் அறிக்கை மேலூர் காவல்நிலையத்தில் குற்ற எண்.740/2023 பதிவு செய்யப்பட்டது என்றால் முதலில் பதிவு செய்துவிட்டு பிறகு என்னுடைய பெயர் நீக்கப்பட்டுவிட்டது. மேற்படி வழக்கு என்னுடைய பெயர் மட்டும் நீக்கப்பட்டு குற்ற இறுதி அறிக்கையும் மேலூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாரிசுதாரர் சான்றிதழ் பெறுவதற்கு முன்னரே வழக்கை தாக்கல் செய்துவிட்டோம். நான் தவறாகசொல்கிறேன் என்றும், 28.07.2016 அன்றே அழகர்சாமியின் வாரிசுதாரர் சான்றிதழ் பெறப்பட்டுவிட்டது என்றால் அதுபற்றி தெரியாது. ஏற்கனவே அழகர்சாமியிடம் இருந்து கிரையம் பெற்றசொத்தின் சர்வே நம்பர் 13/4A2, பதினெட்டாங்குடி சொத்தாகும். அது அவருடைய சுயசம்பாத்திய சொத்தாகும். மேற்படி சொத்தை 09.03.2016 அன்று கிரையம் பெற்றுள்ளேன். மேற்படி சர்வே நம்பர் 13/4A2 வில்லங்கசான்றிதழ் சாட்சியிடம் காட்டப்பட்டு அதில் சந்தானம், மற்றம் அழகர்சாமி ஆகியோரிடம் இருந்து நான் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்கப்பட்டது சாட்சி அதை பார்வையிட்டு சரிதான் என்று குறிப்பிடவே மேற்படி வில்லங்கசான்றிதழ் ஆனது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சொத்து சர்வே நம்பர் 13/4A2 கிரையம் பெற்ற 10 நாட்களில் அழகர்சாமி இறந்துவிடுகிறார் என்றால் சரிதான். அவர் இறந்து ஒருமாதத்திற்குள்ளாக 1ம் பிரதிவாதியை அழைத்து சென்று மற்றொரு கிரைய ஒப்பந்தம் போட்டு மற்றொரு சொத்தான சர்வே நம்பர் 13/4A1 ஐ கிரையம் முடித்தேன் என்றால் சரிதான். மேற்படி சொத்து

யாருடைய சொத்து என்றால் காவேரிக்கு, அரசாங்கம் ஒப்படைவு செய்யப்பட்ட சொத்து ஆகும். மேற்படி சொத்து காவேரியிடம்மட்டுமல்லாமல் சந்தானம் என்பவரிடமும் அவரது வாரிசுகளிடம் இருந்தும் கிரையம் பெற்றதாக மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே நம்பர் 13/4A2 ஒப்படைவு செய்யப்பட்ட நிலத்தினுடைய என் மனைவி பெயரில் கொடுக்கப்பட்ட சொத்து 30 ஆண்டுகளுக்கு பின்னர் விற்பனை செய்யவோ, அல்லது பாராதீனம் செய்யவோ விரும்பும் பட்சத்தில் வட்டாட்சியர் அல்லது கோட்டாட்சியரிடம் முன்அனுமதி பெறவேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சியிடம் வா.சா.ஆ.1 காட்டப்பட்டு, அதில் 2வது பக்கத்தில் அழகசர்சாமி அவர்கள் கடந்த 16.03.2016அன்று காலம்சென்றபிறகு வாரிசுபடி 1வது பார்ட்டிகளான காவேரி மற்றும் சந்தானம் அடைந்தும் அவர்கள் கைவசம் வைத்து வரிகளை செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேலும் வாரிசுகள் என்ற அடிப்படையில் காவேரி மற்றும் சந்தானத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டதாக வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். சாட்சியிடம் பட்டா எண்.1839 பதினெட்டாங்குடி கிராமத்தின் ஆவணம் காட்டப்பட்டு புல எண்.13/5 காவேரி சந்தானம், ஜோதி, லெட்சுமி, செல்வி ஆகியோர் பெயரில் வழக்கு சொத்து வந்ததை கண்டு தான் அவர் பெயரில் ஒப்பந்தம் போடப்பட்டதாக என்று கேட்கப்பட்டது சாட்சி அதை பார்வையிட்டு சரிதான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் விவசாயம் மற்றும் JCB வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கு சொத்து தொடர்பாக மண் அள்ளியது தொடர்பாக என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் சரியல்ல, புகார் மட்டும் கொடுத்தார்கள். வருவாய் துறை அலுவலர்கள் வந்து பார்வையிட்டு குற்றம் இல்லை என்று முடித்துவிட்டார்கள். வழக்கு சொத்து தொடர்பாக

கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்னர் வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை கிரையம் பதிவு செய்வதற்கு முன்னர் தான் வில்லங்கம் போட்டு பார்த்தேன். வழக்கு சொத்தின் மதிப்பு குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் இந்த வழக்கை இந்த நீதிமன்றம் விசாரிப்பதற்கு ஆள்வரையறை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கிரைய ஒப்பந்தமானது கிரையத்திற்காக போடப்படவில்லை என்றும் கடனிற்காக, பிடிமானத்திற்காக போடப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அழகர்சாமி சொத்து என்பதால் அவரின் அனைத்து வாரிசுகளையும் இந்த வழக்கில் தேவையான தரப்பினர்களாக சேர்க்காமல் செல்வி மற்றும் லெட்சுமி ஆகியோரை விடுவித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தொடர்பாக முன்பணம் கொடுத்து கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்வது மோசடியாக ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மதிப்பு குறைத்து காட்டப்பட்டுள்ளது என்றும் ஆகையால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யத்த்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.19 18:29:55 +0530

Sub Judge

Melur